# A.J.S NIDHI HIGHER SECONDARY SCHOOL
## Alandur, Ch-16.




JUNE 2024

# MONTHLY

## REPORT

**Web:** www.ajsnishihsschool.in
**Email:** ajsnidhihss@gmail.com
**Social Media:** @ajsnidhihss

# முகப்புரை

உங்களில் ஒருவன் உங்களுக்காக 2024-2025 ஆம் கல்வி ஆண்டு எப்படி இருக்கிறது? எப்படி இருக்கப் போகிறது என்கின்ற எனது கனவுகளில் சிலவற்றினை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்காகக் கடந்த மாதம் நம் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வுகளைத் தொகுப்பாக ஒரு அறிக்கையாகத் தொகுத்து சமர்ப்பிக்கிறேன். ஜூன் மாதம் பத்தாம் தேதி அன்று பள்ளி திறக்கப்பட்டது. உங்கள் சீனிவாசன் ஆகிய நான் இப்பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன். முதல் நாள் பள்ளி துவங்குவதற்கு முன் ஒன்பதாம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஒரு பத்து மணி அளவில் ஒரு அலைபேசி என்னை அழைத்தது "நாளைய தினம் உங்கள் பள்ளிக்கு அமைச்சர் வருகிறார்" என்ற தகவலோடு. எந்த அமைச்சர் என்று கூடத் தெரியாது ஆனால் அமைச்சர் வருகிறார் என்கின்ற தகவல் மட்டும் வந்தது, அன்றைய தினம் நடைபெற்ற நிகழ்வுகள் நாம் சற்றும் எதிர்பாராதவை நமது பள்ளிக்கு 2 அமைச்சர் பெருமக்கள்-நமது பள்ளி கல்வித்துறை அமைச்சர், நமது பகுதியைச் சேர்ந்த சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் அவர்களோடு இணைந்து நமது பள்ளி கல்வித்துறையின் திட்டங்களைத் தீட்டுகின்ற நிலையில் இருக்கக்கூடிய இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான கல்வி செயலர் அவர்கள். அவர்கள் திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்துக் கொண்டு இருக்கும் கல்வி இயக்குனர், தொடக்க கல்வி இயக்குனர், தனியார் பள்ளிகள் இயக்குனர், மாணவர் நலன் போற்றி பாதுகாக்கின்ற நாட்டு நலப்பணி திட்டத்தின் இணை இயக்குனர். நமது மாவட்டத்தினை தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற முதன்மை கல்வி அலுவலர். நமது கல்வி மாவட்டத்தைச் சிறப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கின்ற மாவட்ட கல்வி அதிகாரி என்று அத்துனை பேரும் கலந்துக் கொண்ட ஒரு நிகழ்வு.

ஆகத் துவக்கம் நாம் எதிர்பார்த்ததை விட மிக அற்புதமாக அத்துணை பேரும் போற்றக்கூடிய வகையில் அமைந்தது நமது பள்ளியினுடைய ஒழுக்கம், நீங்கள் பின்பற்றிய அந்தக் கட்டுப்பாடு, நீங்கள் பேணிக்காத்த அந்தக் கண்ணியம் உண்மையில் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. இதைப் பார்க்கின்றபோது தான் நான் படித்த புத்தகத்தினுடைய தலைப்பை மாற்றி என்னைச் சிந்திக்கச் செய்தது தலைமை ஆசிரியர் என்பது பதவி அல்ல பொறுப்பு. அந்தப் பொறுப்பைச் செவ்வனே செய்ய வேண்டும் என்ற நிலைமையை எனக்குக் கற்பித்தது. அதன் வெளிப்பாடாகத்தான் இந்தக் கல்வி ஆண்டின் துவக்கம் விழாக்கோலத்தோடு அனைவரும் போற்றக்கூடிய வகையில் தமிழகத்தில் உள்ள அத்துணை பத்திரிக்கைகளும் தொலைக்காட்சிகளும் நம் பள்ளியை நோக்கிப் படையெடுத்த நிலையில், அன்றைய தினம் ஒரு முத்தாய்ப்பான தினமாக மனதில் அழகாக அமைந்தது. அந்தத் துவக்கத்தோடு நாம் இந்த ஆண்டைத் துவங்கி இருக்கிறோம். அதனுடைய நீட்சியாக நம்முடைய பள்ளியில் சுற்றுச்சூழலை பாதுகாக்க கூடிய வகையில் பெற்றோர்களைக் கொண்டு அதுவும் குறிப்பாகத் தாய்மார்களைக் கொண்டு அவர்களுடைய கைகளால் மரக்கன்றுகள் நடப்பட்டது. அதற்கான மரம் நடுகிற விழாவும் நடைப்பெற்றது. இது தேசிய பசுமைப்படையால் ஒருங்கிணைந்து ஆற்றிய செயல்.அனைத்து மன்றங்களும் செம்மையாய் செயல் பட வேண்டும் என்பதற்காக அனைத்து மன்றங்களின் துவக்க விழா வெகுசிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது அந்தத் துவக்க விழா போற்றுதலுக்குரியதாக மிகச் சிறப்பாக இருந்தது. ஆக ஒவ்வொரு நிகழ்வுகளும் துவங்குவதற்கு முன் உண்மையிலேயே எதோ ஒரு இலக்கை நோக்கி அடி எடுத்து வைக்கின்றோம் என்பதற்கு இவை எல்லாம் ஒரு அச்சாரமாக அமைந்துள்ளது. முதல் பார்வையில் நம்முடைய அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சொல்வார்கள் அதுபோல நாம் எங்கு இருக்கிறோம் என்று கட்டியம் கூறுவதாக இருந்தது. வெகுசிறப்பாக இலக்கை நோக்கிய வெற்றி பயணமாகத் துவங்கி இருக்கிறோம்.

எனக்கும் ஒரு கனவு இருக்கிறது என்கிற இறையன்பு அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்திலிருந்து வார்த்தைகள் சிலவற்றை இந்தக் கட்டுரையைத் துவங்குவதற்கு பொருத்தமாக இருக்கும் என்கிற அடிப்படையில் எனக்கும் ஒரு கனவு இருக்கிறது, மாணவர்களைப் பந்தைய குதிரைகளாக மாற்றாமல் போர் குதிரைகளாக மாற்றுகிற முயற்சிகளை எடுப்பது தான் அந்தக் கனவு.



எல்லா மாணவர்களையும் அச்சில் வார்ப்பது போல ஒரே அளவில் செய்கிற வன்மம் குறைந்து அவரவர் திறமைகளுக்கேற்ப அவர்களை வடிவமைக்கும் சூழல் உருவாக வேண்டும். தேர்வு என்கிற போட்டிக்காகக் கல்வி என்பதை மாற்றித் தன்னை உணர்வதற்கும் உலகை அறிவதற்கும் கல்வி ஓர் உபாயம் என்கிற உன்னத நிலை ஏற்படுத்தப்படும். கல்விக்கூடங்கள் மாணவர்களைப் போட்டியாளர்களாகப் பார்க்காமல் சகோதரர்களாகப் பார்க்கும் சகஜ நிலையை உருவாக்குவோம். இன்று இருக்கின்ற மாணவர்கள் தங்களுக்காக மட்டும் கற்காமல் ஒட்டுமொத்த சமூகத்தின் உயர்வுக்காக அதை மனதில் வைத்து ஒவ்வொரு எழுத்தையும் கற்பார்கள். அந்தக் கல்வி கல்லாய் கணக்காமல் கற்கண்டாய் சுவைக்கும், வீட்டுப்பாடம் என்ற நோட்டு புத்தகங்களை நிரப்புவதை விட்டுவிட்டு சுயமாகச் சொல்லி அவர்களைத் தேட சொல்லித்தரப்படும். பாடப்புத்தகங்களை வேத புத்தகங்கள் என்று நினைக்காமல் அறிவு என்கிற அகன்ற வானில் அவர்களைச் சிறகடிக்க ஊக்கம் தரப்படும்.

இதனுடைய முத்தாய்ப்பாக மாணவர்கள் பாராளுமன்றம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாக அவரவர்களிடையே ஒளிந்திருக்கும் தனித்திறமைகளை வெளிப்படுத்தும் சூழலை உருவாக்கத் துவங்கி இருக்கிறோம். ஆசிரியர்கள் ஆசான்களாகச் சுண்டு விரலைப் பிடித்துச் செல்பவர்களாக இல்லாமல் சுட்டு விரலை நீட்டிச் செல்பவர்களாகத் தட்டிக்கொடுப்பார்கள். கல்வியை மட்டுமல்ல கணினியையும் கற்றுத்தருவார்கள். சரித்திர அறிவு மட்டுமில்லாமல் சரித்திரத்தில் உள்ள அவலங்களையும் சொல்லிக் கொடுப்பார்கள். உலகத்தின் ஆட்சியைப் பற்றிப் பேசாமல் உலகத்தில் நடக்கிற சாமானியர்களின் எதார்த்தங்களை விளக்குவார்கள். அவர்கள் வகுப்பில் முந்துகிற மாணவர்களுக்கு மற்றும் கற்றுத் தராமல் கடைசி வரிசையில் பரிதாபமான நிலையில் இருக்கக்கூடிய மாணவனையும் மனதில் வைத்துச் சொல்லிக் கொடுப்பார்கள். அவர்கள் வரம்பு மீறுகிற மாணவர்களைப் பிரம்பு காட்டி பயமுறுத்தாமல் அன்பு காட்டி ஆற்றுப்படுத்துவார்கள். பின் தங்கி இருக்கிற மாணவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அவனுடைய திறமை அறிந்து அதில் ஈடுபட அவனுக்கு ஊக்கம் கொடுப்பார்கள். குறிப்பாகப் பெற்றோர் தாறுமாறாக இருக்கும் இல்லங்களில் தடுமாறும் வாரிசுகளுக்கு நமது ஆசிரியர்களே அகல் விளக்காய் இருந்து ஒளி கொடுப்பார்கள்.இவையெல்லாம் முன்னாள் தலைமை செயலர் மதிப்பிற்குரிய இறையன்பு இந்திய ஆட்சிப் பணி அவர்களுடைய கனவுகளிலிருந்து என்னைப் பாதித்த எனது கனவாக எனது லட்சியமாக உருமாறி இருப்பதனையும் மாணவர்களின் வாழ்க்கையில் மகத்தான மறுமலர்ச்சி வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம் என்பதையும் உங்களிடத்தில் மகிழ்ச்சியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய கருத்துக்களை நான் வெளிப்படுத்த உதவி புரிந்த நமது நிதி பள்ளி மாணவர் பாராளுமன்றத்தினுடைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினுடைய மாண்புமிகு அமைச்சர்கள் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிக்கை துவக்கப்பட்டது இதை நோக்கியே இந்தக் கனவுகள் மெய்ப்பட வேண்டும் இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அதன் கண் விடல் என்ற திருவள்ளுவரின் குரலுக்கு ஏற்ப ஒவ்வொருவருக்கும் பல்வேறு தரப்பட்ட கருத்துக்களுக்கும் நோக்கங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் ஒவ்வொரு பொறுப்பாக வழங்கி இருக்கிறோம் அவர்கள் அத்தனை பேரும் கொடுத்த பொறுப்பை உணர்ந்து செம்மையாகச் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**JUNE MONTH**
**MONTHLY REPORT 24-25**




காய்கின்ற மரம் தான் கல்லடி படும் என்பார்கள் நாம் நல்லது செய்கின்றபொழுது உண்மையிலேயே நாம் பொறுப்புணர்வோடு நடந்து கொள்கின்றபொழுது சில விமர்சனங்கள் சில ஏளனங்கள் தவிர்க்க முடியாதவை இவை எல்லாம் "போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும் எவர்வரினும் நில்லேன் அஞ்சேன் என்ற பாரதிதாசனின் வரிகளை மனதில் நிறுத்தி நாம் நமது இலக்கை நோக்கி வெற்றி நடை போட வேண்டும் ஊர் கூடி இழுத்தால் தான் தேர் நகரும் என்பது போலத் தலைமை ஆசிரியர், ஆசிரியர், பெற்றோர் மற்றும் மாணவர்கள் என்கின்ற நான்கு நிலையிலிருந்து ஒன்றிணைந்து நாம் இழுத்தால் தான் கல்வி என்கின்ற அந்த நூறு விழுக்காடு தேர்ச்சி இலக்கை எட்டுகிற இந்தத் தேர் நகரும் நகர வேண்டும் நகர்த்துவீர்கள் என்கின்ற அந்த நம்பிக்கையில் ஜூன் மாதத்தில் நமது பள்ளியில் என்னென்ன நடந்தது, மேற்கொள்ளப்பட்டது என்கின்ற இந்த அறிக்கையில் புகைப்படங்களோடு வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் உங்களில் ஒருவனாக உங்கள் கனவுகளை நினைவாக்கும் ஒருவனாக இந்த அறிக்கை மூலமாக உங்களிடத்திலே தொடர்பு கொள்வேன் அதுவரை உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் சென்று கொண்டிருங்கள் உங்களுடைய ஆசையை, உங்களுடைய கனவை, உங்களுடைய லட்சியத்தை உங்களில் ஒருவனாக உங்கள் பார்வையில் என்னுடைய பார்வையை செலுத்தி உங்களுடைய அந்த ஆசைகளையும் நிறைவேற்றுபவனாகக் கல்வி கற்கிற சூழல் உங்களுக்கு இனிமையானதாக மாற்றுகிற, மாறி இருக்கிற சூழலை நிலை நிறுத்துவதற்காக.. உங்கள் ஆசைகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் பள்ளி நிர்வாகம் உங்களிடம் கேட்பதெல்லாம் நீங்கள் அத்தனை பேருமே தேர்ச்சி பெற்று மேற்படிப்பை தொடர வேண்டும் என்பதுதான். ஆக உங்கள் ஆசைகளை நாங்கள் பூர்த்தி செய்கிறோம், நிர்வாகத்தினுடைய ஆசையை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும்.வருகின்ற கல்வி ஆண்டினுடைய தேர்ச்சி முடிவுகள் அத்தனை பேரும் நம்முடைய பள்ளியில் தேர்ச்சி பெற்று மேற்படிப்புக்கு சென்றார்கள் என்கின்ற நிலையை அடைய வேண்டும் நீங்கள் அடைவீர்கள் அடையப் போகிறீர்கள். இதுகுறித்து ஒவ்வொரு மாத அறிக்கையிலும் உங்களில் ஒருவனாக உங்களோடு எனது கருத்துக்களை அதாவது உங்கள் கருத்துக்களை உங்களிடத்திலிருந்து உள்வாங்கிய கருத்துக்களை அறிக்கையின் வாயிலாக உங்களோடு தொடர்பு கொள்வேன் என்று கூறி இத்துடன் இந்த ஜூன் மாதத்தினுடைய அறிக்கையின் முகப்புரையை நிறைவு செய்து அடுத்த மாதத்தின் அறிக்கையினுடைய தொடர்ச்சி தொடரும்... தொடரும்.... தொடரும்...

**நன்றி வணக்கம்**







10.06.2024 அன்று மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் **திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி** ஐயா அவர்களாலும் மாண்புமிகு சிறு குறு தொழில்கள் துறை அமைச்சர் **திரு. தா. மோ. அன்பரசன்** ஐயா அவர்களாலும் பாடப்புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்கி நமது பள்ளியில் இக்கல்வியாண்டை துவக்கி வைத்தார்கள்




2024-2025 கல்வி ஆண்டின் முதல் நாளான 10.06.2024 அன்று பள்ளிக்குப் புதிதாக வருகை புரிந்த ஆறாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்குப் பூவும் இனிப்பும் வழங்கி வரவேற்று மகிழ்ந்தோம்




Farewell to our school English Teacher **Smt. RENUKADEVI**


18.06.2024 அன்று **தேசிய பசுமைப் படையின்** சார்பாக பள்ளி வளாகத்தில் மாணவ மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோருடன் சேர்ந்து **மரக்கன்றுகள்** நடப்பட்டன. பள்ளி செயலர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் உடன் இருந்தனர்.




தமிழக காவல்துறையுடன் சேர்ந்து போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாணவர் பேரணி நடைப்பெற்றது.




Distribution of study card, belt and tie to the New Students for the year 2024-25.






20.06.2024 **தமிழ்நாடு காவல் துறை சமூகநீதி மற்றும் மனித உரிமைகள்** பிரிவின் சார்பாக மாணவர்களுக்கு **விழிப்புணர்வு பொதுக்கூட்டம்** நடைபெற்றது.




**21/06/2024 சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மனவளக்கலை மன்றம் சார்பாக மாணவர்களுக்கு யோகா பயிற்சி அளிக்கப்பட்டது .**




**CAREER GUIDANCE** PROGRAM WAS ORGANIZED BY THE **IMAGE CREATIVE EDUCATION**

OUR SCHOOL STUDENTS TOOK PLEDGE THAT THEY WOULD NEVER GET INTO DRUG USAGE AND ITS ADDICTION. THIS WAS AN INITIATIVE BY THE FOOD SAFETY DEPARTMENT OF CHENGALPATTU DISTRICT




NSS Unit of SDNB Vaishnav College for women organized a session about Drug Awarness on 26.06.2024




**அனைத்து மன்ற செயல்பாடுகளின் துவக்க விழா** 27.06.2024 அன்று மிக சிறப்பாக நடைப்பெற்றது. **திரு.S. துரை பாண்டியன்** அவர்கள் சிறப்பு விருந்தினராக சிறப்புரையாற்றினார்.






27.06.2024 அன்று சாரணர்களுக்கான அடிப்படைத் தேர்வான **பிரவேஷில்** தேர்ச்சிபெற்ற சாரணர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.




**DRAWING COMPETITION** WAS ORGANIZED ON THE TOPIC "**DRUG AWARNESS**"




உலக சிலம்ப விளையாட்டு சங்கத்தின் சார்பாக நடைபெற்ற சிலம்ப போட்டிகளில் கலந்துக்கொண்ட 1500 மாணவர்களில் அதிகபடியான முதல் மற்றும் இரண்டாம் பரிசினை வென்று சாதனை படைத்துள்ளனர் நம் பள்ளி மாணவ மாணவிகள்



# நன்றி வணக்கம்